# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1643/40 - 2010 මාර්තු 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.03.04

*1643/40 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : ஆர்/கா/1/122.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியுள்ளது என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணிகளின் விபரங்கள் :

கருக்குபனே நீர்வழங்கள் திட்டத்தின் துளைத்துவாரக் கிணறு அமைக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வது தொடர்பாக புத்தளம் மாவட்ட நில அளவையியலாளரினால் தயாரிக்கப்பட்ட பி.வ.பு. 4596 வரைபடத்தின் துண்டு இல. 01 எனக் காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 0.0007 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட 'வேப்பமரத்தடி வயல் காணி' எனும் காணி :

வடக்கு : திரு. கே. கணபதிப்பிள்ளை உரிமைகோரும் வேப்பமரத்தடி வயல் காணி மற்றும் அரசாங்கம் உரிமைகோரும் வேப்பமரத்தடி வயல் காணி ; கிழக்கு : அரசாங்கம் உரிமை கோரும் வேப்பமரத்தடி வயல் காணி மற்றும் பி.வ.பு 4417 இன் துண்டு இல. 01; தெற்கு : அரசாங்கம் உரிமை கோரும் வேப்பமரத்தடி வயல் காணி மற்றும் திரு. கே. கணபதிப்பிள்ளை உரிமைகோரும் வேப்பமரத்தடி வயல் காணி ; மேற்கு : திரு. கே. கணபதிப்பிள்ளை உரிமைகோரும் வேப்பமரத்தடி வயல் காணி .

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஆரச்சிக்கட்டுவை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.04.07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எஸ். எஸ். லுசேனா,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஆரச்சிக்கட்டுவை,
2010.03.01.

03 - 681